**திவுலப்பிட்டி பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திவுலப்பிட்டி பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் திவுலப்பிட்டி பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடன்படிக்கை செய்யப்பட்ட போதும் வேலை பூர்த்தி செய்யப்படாத 18 நிர்மாண செயற்திட்டங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 25,454,000 கடன்கொடுத்தோர் | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவில் செலவு வைத்து நடைமுறை வேலையாக வரவு வைப்பதற்கு பதிலாக நடைமுறைச் சொத்தில் ஏனைய பெற வேண்டியவைகளாக வரவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2022 சனவரி 04 ஆந் திகதிய LGD/10A/நகி/2021 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் கணிப்பிடும் போது ரூபா 5,000 இனை விட குறைவான மீள் மதிப்பீடு / கொள்வனவு விலை உள்ள தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களிலிருந்து அகற்றப்பட்டு பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கி வருடாந்த மெய்மையாய்வுகளில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பிரதேச சபையின் கூட்டுப்பெறுமதி ரூபா 500,498 ஆன அவ்வாறான 214 விடயங்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | பெறுமதி ரூபா 5,000 இனை விட குறைவான இருப்பு விடயங்கள் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான பெறுமானத்தேய்வு ஒதுக்கீடாக ரூபா 117,233 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கடன்கொடுத்தோர் ஒதுக்கப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 2,420,385 ஆன கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் 08 சம்பவங்கள் மீளாய்வாண்டில் செலவினத் தலைப்பில் சீராக்கப்படாமல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ஏனைய பெற வேண்டியவைகளாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் அதிகரித்து கண்ககீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்ட மூலதன சொத்துக்களை கொள்வனவு செய்தல் 8 இற்குரிய கூட்டுப்பெறுமதி ரூபா 954,079 தொகை நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக நடைமுறை சொத்துக்களில் ஏனைய பெற வேண்டியவைகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | 2022 சனவரி 04 ஆந் திகதி LGD/10A/நகி/2021 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல ஒதுக்கங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்காக அதிலுள்ள மாதிரியின் பிரகாரம் தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை கணக்கில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையின் நிதிக்கூற்றுக்களுடன் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (எ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் 07 தொகுதிகளின் பெறுமானத்தேய்வு ஒதுக்குதல் கணக்குகளின் மீதி ரூபா 162,451 இனால் அதிகரித்து, ஆதனங்கள், பொறிகள் மற்றும் 02 உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ஒதுக்குதல் கணக்குகளின் மீதி ரூபா 56,286 இனால் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதி ரூபா 328,755,376 தொகை மற்றும் பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதி ரூபா 271,064,232 ஆனமையால் ரூபா 57,691,144 இணங்காமை அவதானிக்கப்பட்டது. | இந்த 04 கணக்கு விடயங்களினது வேறுபாடுகள் 2021 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற வேறுபாடாகும். உரிய விடயம் உரிய விடய உத்தியோகத்தருக்கு கையளித்து இது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படா | 17,981,571 | பட்டோலை | இந்த 06 கணக்கு விடயங்கள் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து | வேறுபாடுகளை இனங்கண்டு பட்டோலைகளை |

| | | | |
|---|---|---|---|
| மையால் 06 கணக்கு மீதிகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | இறுதிக் கணக்கில் கொண்டு வரப்படுகின்ற மீதியாக இருந்ததுடன் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கான தகவல்களை வழங்குமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | தயாரிப்பதற்கும் தீர்த்து வைக்க வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலியக் குடியரசின் நிதிப்பிரமாண கோவையின் நிதிப்பிரமாணம் 371 | 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது நிறுவனம் மற்றும் 13 நபர்களுக்கு பொருட்கள், இயந்திரம் மற்றும் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 2,070,429 தொகை 2020 ஆம் ஆண்டின் போதும் 02 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தேங்காய் மற்றும் அரிசி மானியங்களை வழங்குவதற்காக வெளி நபர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 844,250 தொகை மற்றும் 2013 ஆம் ஆண்டின் போது எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 66,000 ஆக முற்பணத்தின் கூட்டு மொத்தம் ரூபா 2,980,679 தொகை 2022 யூன் 10 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2007 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாத முற்பணம் தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை நடாத்துதல் பரிந்துரை செய்யப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. ரூபா 844,250 முற்பணத்தை செலுத்துமாறு உள்ளூராட்சி ஆணையாளரால் கம்பஹா, மஹர மற்றும் பாணந்துறை செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தீர்க்கப்படாத முற்பணம் தீர்க்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு இலக்கம் 20 | ஆதனவரி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டுத் திணைக்களத்தை வரவழைத்து மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் பிரதேச சபையினால் திவுலப்பிட்டிய வாராந்த சந்தை வளவின் கடைகள் தொடர்பாக ஆதனவரி மதிப்பீடு இறுதித் தடவையாக 2014 ஆம் ஆண்டின் போதே மேற்கொள்ளப்பட்டிருந்தது. | திவுலப்பிட்டி வாராந்த சந்தைக் கடைகள் புதிய கடை வாடகை மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக 2022.05.25 ஆந் திகதிய கடிதத்தில் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது. | மீள்நினைவூட்டல் அனுப்பி தாமதமின்றி மதிப்பீட்டை செய்து புதிய ஆதனவரி வீதத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 48,140,000 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 72,591,000 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

**வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதவரியும் வரியும் | | |
| (அ) 2021 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,732,641 ஆதனவரி நிலுவை மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 9,403 தொகை, 5 இற்கும் 10 வருடங்களுக்கு இடையில் ரூபா 16,220 தொகை, 3 இற்கும் 5 வருடங்களுக்கு இடையிலான ரூபா 23,832 தொகை, 1 இற்கும் 03 வருடங்களுக்கு இடையில் ரூபா 1,783,070 மற்றும் 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 1,900,116 ஆக இருந்தது. தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனவரி | விசேட ஆதனங்கள் தற்காலிகமாக மதிப்பீட்டின் பிரகாரம் ஆதனவரி செலுத்துதல் புறக்கணிக்கப்படுமாயின் உரிய ஆதன உரிமையாளரை வரவழைத்து கலந்துரையாடப்பட்ட விடயங்களின் பிரகாரம் மற்றும் சபைத் தீர்மானங்களின் பிரகாரம் நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத் | ஆதனங்களுக்காக புதிய நிலையான மதிப்பீட்டை பெற்றுக் கொண்டு அதன் பிரகாரம் நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடிக்கையாளர்களினால் நிராகரிக்கப்பட்டு 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான நிலுவைக்கு காரணமாக இருந்தது. | தருகின்றோம். | |
| (ஆ) | 2007 பெப்ரவரி 09 ஆந் திகதிய இலக்கம் 1484 என்ற இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி பத்திரத்தில் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக வெளியிடப்பட்டிருந்தது. பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆதன மெய்மையாய்வின் பிரகாரம் மொத்த சொத்துக்களின் எண்ணிக்கை 57,872 ஆக இனங்காணப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டு வரையில் சபையினால் ஆதனவரி 1116 வீட்டு ஆதனங்களுக்காக அறவிடப்பட்டிருந்தது. 1,573 வியாபார ஆதனங்களிலும், ஏனைய 128 ஆதனங்களிலுமாக மொத்த ஆதனங்கள் 2,817 அளவாகும். 2021 ஏப்ரல் மாதம் தகவல் பெறப்பட்ட 17,545 ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட போதும் 2022 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் புதிய மதிப்பீடு வழங்கப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு உப அலுவலக மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | ஆதனங்களுக்காக புதிய நிரந்தர மதிப்பீட்டை பெற்று அதன் பிரகாரம் சகல ஆதனங்களி லிருந்தும் ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இடமாற்றலாகிச் சென்ற, மரணமடைந்த, ஓய்வூதியம் பெற்ற, சேவையை கைவிட்டுச் | ரூபா 361,275 ஆன மீதியில் ரூபா 196,634 மீதி மரண பணிக்கொடையிலிருந்து | ஊழியர் கடனை அறவிடுவதற்கும், பதிவழிப்பதற்கு தீர்மானம் எடுத்த |

| | | |
|---|---|---|
| சென்றதன் அடிப்படையில் 40 ஊழியர்களிடமிருந்து ரூபா 693,095 தொகையான அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டது. | அறவிடுவதற்கும் எஞ்சிய மீதியை பதிவழிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற துடன் அறவிடப்படாது காணப்படுகின்ற ஊழியர் கடனுக்காக தனிப்பட்ட முகவரியை கண்டறிதல், இடமாற்றல் பெற்றுச் சென்ற இடங்கள் தொடர்பாக கண்டறியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | கடன் மீதியை முறையான அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திவுலப்பிட்டி பொதுச்சந்தையின் 20 கடைகளுக்காக 2021 திசெம்பர் மாதம் அரசாங்கத்தின் மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை கிடைக்காமையின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவிடப்பட்டிருந்தமை, வல்விட்ட துருசெவனயில் 38 கடைகளில் இறுதித் தடவையாக மதிப்பீடு 2008 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக கடைகளின் மாதாந்த தொகை ரூபா 400 ஆன குறைந்த பெறுமதியை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மிகுதி மதிப்பீட்டிற்காக நிலவரைபடம் தயாரிக்குமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து கிடைத்த ஆலோசனையின் அடிப்படையில் அந்த செயற்பாடுகளுக்காக 2021 நவம்பர் 25 ஆந் திகதி சபை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் 2022 யூன் 10 ஆந் திகதி வரையில் நிலவரைபடம் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய கடை வாடகை மதிப்பீட்டை வழங்குமாறு 2022 மே 26 ஆந் திகதி அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் புதிய கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | அரசாங்கத்தின் மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கும் மிகுதி மதிப்பீட்டு திருத்தங்களுக்காக நில வரைபடமொன்றை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் புதிய மதிப்பீட்டு அடிப்படையில் வாடகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வல்விட்ட துறுசெவன நிலத்தில் ரூபா 1,846,590 சபை செலவில் நிர்மாணிக்கப்பட்ட இயற்கை உணவகம் 2019 திசெம்பர் 18 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட அறிக்கை பொதுச் சபைக்கு சமர்ப்பித்து 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. வாடகையாளர்கள் தொடர்பாக சரியான ஆய்வின்றி இந்த நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக கட்டிடம் 2021 யூன் 10 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | செயற்திட்ட அறிக்கை 2022 ஏப்ரல் 08 ஆந் திகதி பொதுச் சபைக்கு சமர்ப்பித்து கேள்வி கோரி வாடகைக்கு வழங்குவதற்கு செய்திப்பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. | தேவை தொடர்பாக சரியான ஆய்வு செய்ததன் பின்னர் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கும் புதிய மதிப்பீட்டினை பெற்று கேள்வி கோருவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **கையேற்கப்படாத சொத்துக்கள்** | | |
| பிரதேச சபையிலிருந்து கிடைத்த திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத, அரச நிர்வாக அமைச்சின் மூலம் கிடைத்த 03 வாகனங்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து கிடைத்த 03 வாகனங்களை உள்ளடக்கிய கூட்டுப்பெறுமதி ரூபா 31,879,173 தொகையான 06 வாகனங்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் கழிவுப் பொருள் நிலையத்திற்கு எடுத்துச் செல்வதற்கு முன்னர் களஞ்சியப்படுத்துவதற்கு குறித்துரைத்த இடமொன்று தயாரிக்கப்படாதிருப்பதன் காரணமாக சுற்றாடல் மாசுபடுதலுக்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் கழிவுப்பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக பொருத்தமான இடமொன்றை தயாரிப்பதற்காக ரூபா 680,000 மதிப்பீடொன்று 2022 பெப்ரவரி 18 ஆந் திகதிய தொழில்நுட்பக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட போதிலும் 2022 யூன் 10 ஆந் திகதி வரையிலும் அந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கழிவுகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பொருத்தமான இடமொன்றை தயாரிப்பதற்காக 2022 பெப்ரவரி 18 ஆந் திகதிய தொழில்நுட்ப குழுவின் இலக்கம் 01.09 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | கழிவுகளை சேகரிக்கும் போது உக்கும் மற்றும் உக்காத வகையில் வேறுபிரிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் மாத்திரம் சேர்த்துக் கொள்வதற்கும் அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்டு தனித்தனியாக கழிவுப் பொருட்களை நேரடியாக கெரவலப்பிட்டி கழிவுப் பொருள் நிலையத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |